கூட்ட எண் 04 நகராட்சி அலுவலகம்,
2019 - 2020 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 30.08.2019

2019-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30.08.2019 ந்தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீலை 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பிளாஸ்டிக் கழிவு துணை விதிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை POLIY NOTE ஆகியவை திருவண்ணாமலை மாவட்ட அரசிதழில் வெளியிட விருத்தாசலம் அரசு அச்சகத்தில் பிரிண்டிங் செய்ய அச்சக கட்டணம் திரு. சரவணகுமார் களப்பணி உதவியாளர் பெயரில் முன்பணமாக ரூ. 30000/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது..
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 3. தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 6889/2010/எச்1)

4. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN25BY7893 டிப்பர் லாரி TTR பம்பு பழுது அடைந்துள்ளது சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 38572/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 3. தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம் (கோப்பு எண் 1704/2019/எச்1)

5. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண் 2833/இ4/2013 நாள் 06.08.2019ன்படி, நகரப் பகுதிகளில் நோய் தடுப்பு பணிகள் பாதிக்காத வகையில் ஏற்கனவே பணி செய்து வரும் டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணியாளர்களை 08.08.2019 முதல் 31.10.2019 வரை மூன்று மாத காலங்களுக்கு 30 தற்காலிக பணியாளர்களை நியமித்து டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி ரூ. 280/- என்ற அடிப்படையில் ஆகம் தோராய செலவினம் ரூ.7.56 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. பொது சுகாதாரம் டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய் தடுப்பு பணியின் அத்தியாவசியம் என்பதால், 08.08.2019 முதல் 31.10.2019 வரை தற்காலிக பணியாளரகளை பணியமர்த்தி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1537/2012/எச்1)

6. இந் நகராட்சிக்கு சொந்தமான கடை வாடகை ஆண்டு குத்தகை இனங்கள், நகராட்சி குத்தகைதாரர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி (GOODS AND SERVICE TAX) தொகையினை உரிய மத்திய அரசு தலைப்பில் செலுத்த நகராட்சி கணக்கில் இருந்து GST REGISTRATION NUMBER பேறப்பட வேண்டும். ( நகராட்சி கடை வாடகை ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் நகராட்சி குத்தகைதாரர்கள்) திரு. A. சேகர், தணிக்கையாளர், ஆரணி என்பவரிடமிருந்து நகராட்சி கணக்கில் GST REGISTRATION (GSTIN ; 33CHEA03946FID5, GSTIN ; 33AAALC129JZC) செய்தமைக்கு 2000 X 2 = 4000/- மற்றும் ஜீலை 2017 முதல் ஜீன் 2018 வரையிலான காலத்திற்கு தொகை செலுத்தி RETURN FILLING செய்தமைக்கு கட்டணமாக ரூ. 24000/- (4000 + 24000 = 28000) ஆக மொத்தம் ரூ. 28000/- தொகை வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 1556 / அ3 / 2019)

7, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 31600/பி4/2018, நாள் 12.12.2018ல் ஆரணி நகராட்சி காந்தி சாலை அருகில் வார்டு சி, பிளாக் 7 நகரளவு எண் 14partல் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் (புதிய பேருந்து நிலையம் அருகில்) 1467.00 ச.மீட்டர் பரப்பளவில் புதியதாக 144 எண்ணிக்கையில் மதிப்பீடு ரூ. 250.00 லட்சத்தில் காய்கறி மார்கெட் கட்டடம் கட்ட உத்திரவிடப்பட்டுள்ளது. Construction of 144 Vegetable Shops in Arani Municipality. Thiruvannamalai District, Tamil Nadu under Design Build, Finance, Operate and Transfer (DBFOT) basis of Public Private Partnership (PPP) mode) உரிய கட்டட வரைபடங்கள் மற்றும் தயார் செய்ய விலைப்புள்ளி கோரியதில், பின்வரும் நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) K.B.S Planners & Builders, No. 1/6A, V.O.C Street, Arani - 37500/-
2) K. Sundararajan,LBS, Shree Nilayam, 55,Jain. Sevoor, Arani Tk - 40000/-
3) C.J.V. Planners & Builders, 31, S.S.Koil Street, Kosappalayam, Arani - 43000/-

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள K.B.S Planners & Builders, என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், பணியின் அவசியத்தை கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெறவும், மேற்படி செலவினத்தை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1370/எப்1/2019)

8. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட விரிவாக்க மனைப்பிரிவு பகுதிகளில் உள்ள மண் சாலைகளை மேம்படுத்தவும், மற்றும் குடிநீர் அபிவிருத்தி பணிகளில் சேதமடைந்த சாலைகளை செப்பணிடும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.500.00 இலட்சங்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1,3,8,9,14 மற்றும் 27 | வார்டு எண் 1 முல்லை நகர், வார்டு எண் 8 காயிதே மில்லத் தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் தார்சாலை, வார்டு எண் 1 தர்மராஜா கோயில் தெரு முதல் புதுகாமூர் சாலை வரை, வார்டு எண் 3 வெற்றிலைகாரத்தெரு முதல் தர்மராஜா கோயில் தெரு வரை, வார்டு எண் 9 பையூர் சாலை மற்றும் வார்டு எண் 14 சபாஷ்கான் தெரு முதல் வெங்கடேஷ்வரா நகர் சுடுகாடு சாலை தார்சாலை அமைத்தல். மற்றும் வார்டு எண் 27 முள்ளிப்பட்டு ரோடு (எம்.ஜி.ஆர் நகர் விரிவு பகுதி), மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்தல் , அண்ணா நகர் முதல் குறுக்குத் தெரு (கிருபானந்தவாரியார் தெரு) தார்சாலை அமைத்தல் | 200.00 |
| 2 | 24,25, 30 31 மற்றும் 33 | வார்டு எண் 24 தண்டுமாரியம்மன் கோயில் தெரு, தாதுத் தெரு வார்டு எண் 25 பாலாஜி நகர், அம்மன் நகர் மற்றும் கோவிந்தன் தெரு விரிவு பகுதிகள், மற்றும் வார்டு எண் 31 கோட்டை தெற்குத் தெரு (அரசு மருத்துவமனை சாலை) தார்சாலை அமைத்தல், வார்டு எண் 33 மகாலட்சுமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால், மற்றும் தார்சாலை, மற்றும் பாஸ்கர் நகர், ஜெயலட்சுமி நக்ர, வி.ஏ.கே நகர் விரிவு பகுதி, தேனருவி நகர் மற்றும் வார்டு எண் 33 பள்ளிக்கூடத் தெரு (மாரியம்மன் கோயில்) தார்சாலை அமைத்தல், | 200.00 |
| 3 | 1,2,13,16,21, 25,27,29 மற்றும் 33 | வார்டு எண் 01 அருந்ததியர் பாளையம், வார்டு எண் 02 குப்பன் தெரு முதல் ராஜாஜி தெரு, வார்டு எண் 25 சைதை கந்தசாமித் தெரு, சிமெண்ட் கான்கீரிட் சாலை, வார்டு எண் 13 கண்ணப்பன் தெரு விரிவு பகுதி, வார்டு எண் 27 அண்ணா நகர் விரிவு பகுதி, மற்றும் வார்டு எண் 33 பள்ளிக்கூடத் தெரு விரிவு பகுதியில் பேவர் பிளாக் சாலை, வார்டு எண் 16 மல்லி பிள்ளையார் கோயில் தெரு, வார்டு எண் 21 தென்னமரத் தெரு முதல் மாரியம்மன் கோயில் தெரு வரை, வார்டு எண் 29 அன்பு நகர் பிரதான சாலை ஆகிய சாலைகளில் தார் சாலை அமைத்தல் | 100.00 |
| | | மொத்தம் | 500.00 |

அலுவலக குறிப்பு :– மேற்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு அரசிடமிருந்து மான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ளவும், கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய கருத்துரு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 1754 /2019/இ1)

**9.** மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ6/12863/2018 நாள் 22.08.2019ல் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019ன் கீழ் ஆரணி நகராட்சியில் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவுநீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல் மதிப்பீடு ரூ.12.50 இலட்சத்தில் நகராட்சி மூலம் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணி திட்டப் பணி என்பதால் அவசியம் கருதி நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 3332/2018/இ1)

10. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி 2019 - 2020ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 09.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| | **வருவாய் நிதி** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் ரோடு நகராட்சி பள்ளி, மருசூரான் தெரு நகராட்சி பள்ளி, பழனி ஆண்டவர் கோயில் தெரு நகராட்சி பள்ளி ஆகிய பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் செய்தல் | 3.00 | M. பழனி<br>E.இளங்கோவன் | 0.30 % குறைவு<br>0.50 %. அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஆரணிப்பாளையம் தருமராஜா கோயில் தெரு நகராட்சி பள்ளி, சார்பனார் பேட்டை நகராட்சி பள்ளி, சபியுல்லா தெரு அம்சவேணி அம்மாள் நகராட்சி நடுநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் செய்தல் | 2.00 | E.இளங்கோவன்<br>R. கந்தன் | 0.20 % குறைவு<br>0.80 %. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.. (கோப்பு எண் 765/இ1/2019)

11. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி 2019 - 2020ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>**வருவாய் நிதி** | மதிப்பீடு ரு. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி அலுவலக கட்டடம் மற்றும் கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம் ஆகிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் செய்தல் | 1.50 | E.இளங்கோவன்<br>R. கந்தன் | 0.03% குறைவு<br>0.70 %. அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பன் தெரு நகராட்சி பள்ளி, பாலாஜி நகர் தெரு நகராட்சி பள்ளி, அனந்தபுரம் தெரு நகராட்சி பள்ளி ஆகிய பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் செய்தல் | 3.00 | E.இளங்கோவன்<br>R. கந்தன் | 0.03 % குறைவு<br>0.80 %. அதிகம் |
| 3 | ஆரணி நகராட்சி பகுதிகளில் உள்ள உயர்கோபுர மின்விளக்குகள் பழுது சரி செய்து மூன்று மாத காலத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்தல் | 4.00 | M/s HI-TECH TRONICS, Chennai33<br>Sri Balaji Electricals Chennai 17 | 0.02 % குறைவு<br>0.50 %. அதிகம் |
| 4 | ஆரணி நகராட்சிக்கு சொநதமான சித்தா மருத்துவமனையில் புதியதாக இன்வெட்டர் மற்றும் பேட்டரி பொருத்தும் பணி மற்றும் தரை தளம் அமைத்தல் | 1.50 | E.இளங்கோவன்<br>R. கந்தன் | 0.05 % குறைவு<br>0.10 %. அதிகம் |
| 5 | **கல்வி நிதி** ஆரணி நகராட்சி கண்ணப்பன் தெரு நகராட்சி பள்ளியில் கழிவு நீர் வெளியேறும் பைப் சரி செய்து செப்பனிடும் பணிகள் செய்தல் | 0.50 | E.இளங்கோவன்<br>R. கந்தன் | 0.03 % குறைவு<br>0.40 %. அதிகம் |
| 6 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 28 அனந்தபுரம் தெரு நகராட்சி பள்ளியின் மேற்கூறை, சாய்தளம், மற்றும் முகப்பு கேட் ஆகியவை சரி செய்து பராமரிப்பு பணிகள் | 2.50 | S. உஷாராணி<br>M/s பத்ரா கன்ஸ்ட்ரக்சன்ஸ் சென்னை 101 | 0.02 % குறைவு<br>0.40 %. அதிகம் |
| 7 | ஆரணி நகராட்சி வார்டு எண் 09ல் சபியுல்லா தெரு அங்கன்வாடி மையம் மேற்கூறை செப்பனிட்டு பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.50 | E.இளங்கோவன்<br>R. கந்தன் | 0.05 % குறைவு<br>0.20 %. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.. (கோப்பு எண் 765/இ1/2019)

12. ஆரணி நகராட்சி காந்தி சாலை அருகில் வார்டு C பிளாக் 7, சர்வே எண் 14ல் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 2784.05 ச.மீட்டர் பரப்பளவில் புதியதாக 144 எண்ணிக்கையில் காய்கறி மார்கெட் கட்டடம் அமைக்கும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்நிலையில், ஏற்கனவே இருந்த பழைய மார்கெட்டிற்கு புதிய நிலையத்திலிருந்தும், காந்தி சாலையிலிருந்தும் பொது மக்கள் மார்கெட் உட்புறம் செல்லும் வழிக்காக காலி இடம் விடப்பட்டிருந்தது. மேலும், தற்போது புதிய மார்கெட் கட்டடம் கட்டும் பணியில் பொது மக்கள் சென்று வர மார்கெட்டின் வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதியில் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பழைய மார்கெட்டிற்கு புதிய நிலையத்திலிருந்தும், காந்தி சாலையிலிருந்தும் பொது மக்கள் மார்கெட் உட்புறம் செல்ல வழிக்காக விடப்பட்டிருந்த இடத்தில் நான்கு கடைகள் கட்டி நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தும் வகையில் 16.07.2019 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள வழிக்காக விடப்பட்ட இடத்தில் நான்கு கடைகள் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி கடைகள் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/2019/இ1)

13. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் அலுவலக தொலைபேசி தகவலின்படி, ஆரணி நகராட்சி வார்டு எண் 01ல் உள்ள புத்திரகாமேஷ்வரர் ஆலயம் செல்லும் வழி நவீன எரிவாயு தகனமேடை செல்லும்வழி, சுடுகாடு செல்லும்வழி, ஆகியவற்றில் முற்கள், செடிகள் ஆகியவற்றை JCB இயந்திரம் கொண்டு சுத்தம் செய்தமைக்க தோராய செலவினம் ரூ.29000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 1967/2019/எச்1)

14. நகராட்சி பகுதிகளில் வைக்கப்படும் விளம்பர பலகைகள் அனுமதித்தல் சம்மந்தமாக "தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளில் விளம்பர பலகைகளுக்கு விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003" என்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் விளம்பர பலகைள் நிர்வகித்தல் சம்மந்தமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ல் புதிய சட்டப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவையும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது கீழ்கண்ட அரசாணைகள் மூலம் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தம் செய்து அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அ) மேற்கண்ட பொருள் சம்மந்தமான கீழ்காணும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. அரசாணை எண்.(4D) 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:05.06.2018.
2. அரசாணை எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:30.01.2019.
3. அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:31.01.2019.

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்திருத்த அரசாணைகளில் பிரதானமாக கீழ்கண்ட சட்ட விதிகளில் திருத்தங்கள் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் விண்ணப்ப கட்டணம் ரூ.1000/- நிர்ணயித்துள்ளது
2. விளம்பர வரி என்ற வாசகத்தினை விளம்பர பலகை உரிமக் கட்டணம் என மாற்றி அமைத்துள்ளது இதன்படிக்கு நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் (3 ஆண்டிற்கு) உரிமக் கட்டணம்

   1) பிரதான மற்றும் பேருந்து தடச் சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.6000/-
   2) மற்ற சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.4000/-

3. வருடாந்திர வாடகை இந்நகராட்சி பொறுத்த மட்டில் பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/- இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-
4. விளம்பர பலகைகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் / இடங்களில் மட்டுமே அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 285 ( I ) - ல் உள்ள தண்டணைக் கட்டணம் ரூ.10000/- உள்ளதை உயர்த்தி ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
6. மேற்கூறிய அனைத்துக் கட்டணங்களும் நகராட்சியில் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவற்றின்படிக்கு இந்நகராட்சி பகுதிக்குள் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம்/இடங்களில் விளம்பர பலகைகள் வைக்க அனுமதி கோரும் தேர்வுகளில் கீழ்கண்ட விகித அடிப்படையில் வருடாந்திர வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1. பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/-
2. இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-

அலுவலக குறிப்பு : 1. நகராட்சியின் வருமானத்தினை பெருக்கிடும் நோக்கத்துடன் மேற்குறிப்பிட்டள்ள சட்ட விதிகள் திருத்தம் பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருதி மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2.ஏற்கனவே மேற்படி விதிகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் அடிப்படையிலும், விளம்பர பலகைள் அனுமதிக்கும் தருணங்களில் நகராட்சி பொறியியல் பிரிவில் அன்றைய தேதியில் அனுமதி அளிக்கும் கட்டிடத்தின் நிலைப்புறுதி குறித்த கருத்தினை பெற்று நகராட்சி கட்டிடத்திற்கு அனுமதி பெறும் நபர்கள் எவ்வித சேதமும் விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுடன் இந்நகராட்சி சொந்தமான கட்டிடங்களின் மீது விளம்பர பலகைகள் வைக்க அனுமதி வழங்குவதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.49/2014/எப்1)

15. ஆரணி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் இந் நகர் பகுதியில் உள்ள தெருக்களில் ஏற்படும் தினசரி கழிவுகளை தரம் பிரித்து வாங்கி அந்தந்த பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மையங்களுக்கு கொண்டு சென்று மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைளை தரம் பிரித்து உரமாக்கும் நடவடிக்கை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் வீடுகளில் பிரித்து பெறப்படும் குப்பைகளில் NAPKIN கலந்து வருகிறது. இதனை எரியூட்டும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. எனவே, நகரில் உள்ள நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மையங்களுக்கு தலா ஒரு எண்ணிக்கை வீதம் 5 எண்ணிக்கை NAPKIN INCIENRATOR வாங்கி நிறுவ ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

தனிஅலுவலர்,
ஆரணி நகராட்சி